534

உ

பல பெரியோர்கள் பாடிய

ஞானக் கோர்வை

வெளியிட்டது

M. A. சிதம்பரம் பிள்ளை

கோவில்பட்டி

..948 விலை அணா 2.

...ி பிரஸ், கோவில்பட்டி-48

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
... 1943
MADRAS

பட்டினத்தார் பாடல்.

அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்
றிறந்தான்பெருமையை என்சொல்வேன் கச்சியேகம்பனே. 1

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவர்மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே. 2

113387

கைப்பிடிநாயகன் றூங்கயிலேயவன் கையையெடுத்
தப்புறந்தன்னி லசையாமன்முன்வைத் தயல் வளவி
லொப்புடன்சென்று துயினீத்துப்பின்வந் துறங்குவளை
யெப்படிநானம்புவே னிறைவாகச்சி யேகம்பனே 3

வரிக்கோலவேல்விழி யாரனுராக மயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத் தஞ்சுஞ்சொலேன் றமியேனுடல்
நரிக்கோகழுகு பருந்தினுக்கோ வெய்யநாய்தனக்கோ
வெரிக்கோவிரையெதுக்கோ விறைவாகச்சி யேகம்பனே 4

காதென்றுமூக்கென்று கண்ணென்றுகாட்டியென் கண்ணெதிரே
மாதென்றுசொல்லி வருமாயைதன்னை மறலிவிட்ட
தூதென்றெண்ணாற் சுகமென்றுநாடுமித் துற்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பே னிறைவாகச்சி யேகம்பனே 5

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே 6

சிறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே 7

பொருளுடையோரைச்செயலினும் வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடையோரைமுகத்தினுந் தேர்ந்துதெளிவதுபோ
லருளுடையோரைத் தவத்திற்குணத்தி லருளுளன்பி
விருளறுசொல்லினுங் காணத்தகுங்கச்சி யேகம்பனே 8

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டி முலையான் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத் தள்ளியென் போதப்பொருள்பறிக்க
எண்ணாதுனைமறந்தே னிறைவாகச்சி யேகம்பனே

நாவாரவேண்டு மிதஞ்சொல்லுவாருனை நான் பிரிந்தாற்
சாவேனென்றேயிருந் தொக்கவுண்பார்கள் கைதான்வறண்ட
போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும் பூவையருக்
கேவார்தலைவிதியோ விறைவாகச்சி யேகம்பனே.

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றத்துருத்தியை சோறிடுந்தோற்பையைப் பேசரிய
காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டே னிறைவாகச்சி யேகம்பனே. 11

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மே
லிட்டத்தை நீதவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே 12

பிறந்துமண்மீதிற் பிணியேகுடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின் மேன்மயலாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன்றேதடு மாறிப்பொன்றேறி யப்பாவையர்க்கீர்
திறந்திடவோபணித்தா யிறைவாகச்சி யேகம்பனே, 13

நாறுமுடலை நரிப்பொதிச் சோற்றினை நான்தினமுஞ்
சோறுங்கறியு நிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்
கூறுமலமு மிரத்தமுஞ்சோறுங் குழியில்விழா
தேறும்படியருள்வா யிறைவாகச்சி யேகம்பனே. 14

காம்பிணங்கும்பணைத் தோழார்க்கும் பொன்னுக்குங்
காசினிக்கும், தாம்பிணங்கும் பலவாசையும் விட்டுத் தனித்
துச்செத்துப், போம்பிணந்தன்னைத் திரளாககூடிப்புரண்
டினிமேற், சாம்பிணங் கத்துதையோ வென்செய்வேன்
றில்லைச்சங்கரனே. 15

ஓடாமற்பாழுக் குழையாமல் லோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சி
னூடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே. 16

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னி னம்பலவ
ரடிசார்ந்துநாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே. 17

பத்தும்புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண் கயிலாபுரிக் காளத்தியே. 18

நாறுங்குருதிச் சலதாரைதோற்புரை நாடொறுஞ்சீ
யூறுமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண்
தேறுந்தசைபிளப் பந்தரங்கத்துள சிற்றின்பம் விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சுரனே 19

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருததொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சகநாவொன்று பேசப்புலால் கமழு
மெய்யொன்றுசாரச் செவியொன்றுகேட்க விரும்புமியான்
செய்கின்றபூசை யெவ்வாறுகொள்வாய் வினைதீர்த்தவனே. 20

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாயின்மட்டே
யினமானசுற்ற மயானமட்டேவழிக் கேதுதுணை
தினையாமளவெள் ளளவாகினுமுன்பு செய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே. 21

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலைமேல்வைத் தழு மைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே. 22

சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடவையொன் றில்லாதபோது பகலிரவா
யீயுமெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகன்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே. 23

என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே 24

வாய்நாறுமூழல் மயிர்ச்சிக்குநாறிடு மையிடுங்கண்
பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குளிவாய்
சீநாறும்யோனி யழுநாறுமிந்திரியச் சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க் கோவிங்ஙனே மனம்பற்றியதே 25

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற்கருதித் தமர்போலனைவர்க்குந் தாழ்மைசொல்லி
சேய்போலிருப்பர்கண்டீ ருண்மைஞானந் தெளிந்தவரே. 26

தாயாருஞ்சுற்றமும் பெண்டீருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ணீயாரு நானாரெனப் பகர்வாரந்த நேரத்திலே
நோயாரும்வந்து குடிகொள்வரே கொண்ட நோயுமொரு
பாயாருநீயுமல்லாற் பின்னையேது நட்பாமுடலே. 27

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறைபாததீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே. 28

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நன்னிதியந்தேடி
நலமொன்றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவருமேனழுப் புற்றீசல்போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தோல்மாத்துளையிற் கானுழைத்துக்கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப்போல
வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே. 29

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெங்கேர முஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவேசுகம். 30

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு. 31

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்— நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய். 32

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே--பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தானிருக்குந்தான். 33

சிவவாக்கியர்.

உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவை
கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருட்டரித்த நாதர்பாத மம்மைபாத முண்மையே 34

வடிவுகண்டு கொண்ட பெண்ணை மற்றொருவனத்தினால்
விடுவனோவவனை யின்னம் வெட்டவேணு மென்பனே
நடுவன்வந் தழைத்தபோது நாறுமிந்த நல்லுடல்
சுடலைமட்டுங் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரே

சாத்திரங்க ளோதுகின்ற சத்தசாத பட்டரே
வேத்திரைப்பு வந்தபோது வேதம்வந்துதவுமோ
மாத்திரைப்போதும் முளேமறிந்து தெக்கவல்லீரேல்
சாத்திரைப்பை நோய்களோது சத்திமுத்திசித்தியே 36

தூரதூரந்தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும்விண்ணுமெங்குமாய் பரந்தவிப்பராபரம்
ஊருநாடு காடுதேடி யுழன்றுதேடுமூமைகாள்
நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே. 37

நாலுவேத மோதுவீர் ஞானபாத மறிகிலீர்
பாலுநெய்க லந்தவாறு பாவிகா ளறிகிலீர்
ஆலமுண்ட கண்டனா ரகத்துளே யிருக்கவே
காலனென்று சொல்லுவீர் கனவிலும்ம தில்லையே 38

வித்திலாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைததவாற தெங்ஙனனே
பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாதபோதுசிவ னில்லையில்லையில்லையே 39

சங்கிரண்டுதாரையொன்று சன்னபின்னலாகையால்
மங்கிமாளு தேயுலகில் யானிடங்க ளெத்தனை
சங்கிரண்டை யுந்தவிர்ந்து தாரையூத வல்லிரேல்
கொங்கைகொங்கை பங்கரோடு கூடிவாழலாகுமே 40

நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்
வாழவேணு மென்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலனோலை வந்தபோது கைகலந்து நின்றிடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே 41

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யரோடு பொய்யுமாய்
மாடுமக்கள்பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள்
நாடுபெற்ற நடுவர்கையிலோலைவந்தழைத்திடில்
ஓடுபெற்றதவ்விலைபொருதுகா ணுமூடலமே 42

செய்யதெங்கி லேயிளநீர் சேர்ந்தகார ணங்கள்போல்
ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில் கொண்டனன்
ஐயன்வந்து என்னுளம்புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர்முன்னம் வாய்திறப்பதில்லையே 43

மாறுபட்டு மணிதுலக்கி வண்டினெச்சில் கொண்டுபோய்
ஊறுபட்ட கல்லின்மீதே யூற்றுகின்றமூடரே
மாறுபட்ட தேவரு மறிந்துநோக்கு மென்னையும்
கூறுபட்டு தீர்க்கவோ குருக்கள்பாதம் வைத்ததே 44

கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலும் குளங்களுங் கும்பிடுங் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களு மனத்துளே
ஆவது மழிவது மில்லையில்லை யில்லையே 45

கலத்தின்வார்த்துவைத்தநீர் கடுத்ததீதமுடுக்கினல்
கலத்திலே கரந்ததோ கடுத்ததீ குடித்ததோ
நிலத்திலே கரந்ததோ நீள்விசும்பு கொண்டதோ
மனத்தின்மாசை நீக்கியே மனத்துளே கரந்ததோ 46.

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சிதோ லெலும்பிலு மிலக்கமிட்டிருக்குதோ
பறைச்சிபோகம்வேறதோ பணத்திபோகம்வேறதோ
பறைச்சியும்பணத்தியும் பகுத்துபாருமும்முளே 47

வாயிலேகுடித்தநீரை யெச்சிலென்றுசொல்லுவீர்
வாயிலேகுதப்புவேதம் மெனப்படக் கடவதோ
வாயிலெச்சில் போகவென்று நீர்தனைக் குடிப்பீர்காள்
வாயிலெச்சில் போனவண்ணம் வந்திருந்துசொல்லுமோ 48

ஓதுகின்ற வேதமெச்சி லுள்ளமந் திரங்களெச்சில்
மோதகங்க ளானதெச்சில் பூதலங்க ளேழுமெச்சில்
மாதிருந்த விந்துவெச்சில் மதியுமெச்சி லொளியுமெச்சில்
எதிலெச்சி லில்ல தில்லை யில்லை யில்லை யில்லையே 49

பிறப்பதற்கு முன்னெலா மிருக்குமாற தெங்கனே
பிறந்துமண்ணிறந்துபோ யிருக்குமாற தெங்கனே
குறித்துநீர் சொலாவிடிற் குறிப்பிலாத மாந்தரே
அறுப்பனே செவியிரண்டு மஞ்செழுத்து வாளினால் 50

கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணை மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை யுயிர்களுமுடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய்மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லை யில்லை யில்லையே 51

தரையினிற் கிடந்தபோ தன்றுதூமை யென்றிலீர்
துறையறிந்து நீர்குளித்த தன்றுதூமை யென்றிலீர்
பறையறைந்து நீர்பிறந்த தன்றுதூமை யென்றிலீர்
புறையிலாத வீசரோடு பொருந்துமாற தெங்கனே 52

தூமைதூமை யென்றுநீர் துவண்டலையு மேழைகாள்
தூமையான பெண்ணிருக்க தூமைபோன தெவ்விடம்
ஆமைபோல முழுகிவந் தனேகவேதமோதுநீர்
தூமையுந்திரண்டுருண்டு சொற்குருக்களானதே 53

அறிவிலே பிறந்திருந் தாகமங்க ளோதுநீர்
நெறியிலே மயங்குகின்ற நேர்மையொன் றறிகிலீர்
உறியிலேதயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தேடும்
அறிவிலாத மாந்தரோட ணுகுமாற தெங்ஙனே 54

உடம்புயிரெடுத்ததோ வுயிருடம்பெடுத்ததோ
உடம்புயிரெடுத்தபோ தருவமேதுசெப்புவீர்
உடம்புயிரிறந்தபோ துயிரிறப்பதில்லையே
உடம்புமெய்மறந்து கண்டுணர்ந்துஞானமோதுமே 55

ஆலவித்தி லாலொடுங்கி யாலமான வாறுபோல்
வேறுவித்து மின்றியே ருளைந்துபோக மெய்திடீர்
ஆறுவித்தை யோர்கிலீ ரறிவிலாத மாந்தரே
பாருமித்தை யும்முளே பரப்பிரம மானதே 56

நவ்விரண்டு காலதாய் நவின்றமவ் வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதா யெழுந்துநின்ற மேர்மையிர்
செவ்வையொத்து நின்றதேசிவாயமஞ் செழுத்துமே 57

காலைமாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலைமாலை நீரிலே கிடந்ததேரை யென்பெறும்
காலமேயெழுந்திருந்து கண்கள்மூன்றி லொன்றையும்
மூலமே நினைந்திராகில் முத்திசித்தி யாகுமே 58

இறையறை யிடைக்கிட வுன்றுதூமை யென்கிறீர்
முறையறிந்து பிறந்தபோது மன்றுதூமை யென்கிறீர்
துறையறிந்து நீர்குளித்தா லன்றுதூமை யென்கிறீர்
பொறையிலாத் நீசரோடும் பொருந்துமாற தெங்ஙனே 59

மாதமாதந் தூமைதான் மறந்துபோன தூமைதான்
மாதமற்று நின்றலோ வளர்ந்துரூப மானது
நாதமேது வேதமேது நற்குலங்க ளேதடா
வேதமோதும் வேதியா விளைந்தவாறும் பேசடா. 60

ஊறிநின்ற தூமையை யுறைந்துநின்ற சீவனை
வேறுபேசி மூடரே விளைந்தவாற தேதடா
நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்க ளாவன
சீறுகின்ற மூடரேயத் தூமைநின்ற கோலமே 61

தூமைகண்டு நின்றபெண்ணின் தூமைதானுமூறியே
சீமையெங்கு மாணும்பெண்ணும் சேர்ந்துலகங் கண்டதே
தூமைதானும் ஆசையாய் துறந்திருந்த சீவனை
தூமையற்று கொண்டிருந்த தேசமேது தேசமே 62

வேணும்வேணு மென்றுநீர் வீணுழன்று தேடுவீர்
வேணுமென்று தேடினாலு முள்ளதல்ல தில்லையே
வேணுமென்று தேடுகின்ற வேட்கையைத் திறந்தபின்
வேணுமென்ற வப்பொருள் விரைந்துகாண லாகுமே 63

அம்மையப்ப னப்புநீ யறிந்ததே யறிகிலீர்
அம்மையப்ப னப்புநீ யறியய னரனுமாய்
அம்மையப்ப னப்புநீ ராதியாதி யானபின்
அம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானதே 64

புலால்புலால் புலாலதென்று பேதமைகள் பேசுநீர்
புலாலைவிட்டு மெம்பிரான் பிரிந்திருந்த தெங்ஙனே
புலாலுமாய்ப் பிதற்றுமாய் பேருலாவுந் தானுமாய்
புலாலிலே முளைத்தெழுந்த பித்தர்காணு மத்தனே 65

ஓதிவைத்த நூல்களு முணர்ந்துகற்ற கல்வியும்
மாதுமக்கள் சுற்றமு மறக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாதி நின்றதோ
சோதிபுக் கொளித்தமாயஞ் சொல்லடா சுவாமியே 66.

சாவல்காலு குஞ்சதஞ்சு தாயதான வாறுபோல்
தாயமான கூட்டிலே கலந்துசண்டை கொள்ளுதே
கூவமான கிழநரிக் கூட்டிலே புகுந்தபின்
சாவல்காலு குஞ்சதஞ்சுந் தானிறந்து போனதே 67

மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலுகட் டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிர்ம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே 68

மீனிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மீனிருக்கு நீரலவோ மூழ்வதுங் குடிப்பதும்
ஆட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்.
ஆட்டிறைச்சி யல்லவோ யாகநீங்க ளாற்றலே 69

மாட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மாட்டிறைச்சி யல்லவோ மரக்கறிக் கிடுவது
மானிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மானுரித்த தோலலோ மார்புநூ லணிவதும் 70

கருத்தரிக்கு முன்னெலாங் காயம்நின்ற தேயுவில்
உருத்தரிக்கு முன்னெலா முயிர்ப்புநின்ற தப்புவில்
அருட்டரிக்கு முன்னெலா மாசைநின்ற வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயமென்று கூறுமே 71

நல்லவெள்ளி யாறதாய் நயந்தசெப்பு நாலதாய்
கொல்லுநாக மூன்றதாய்க் குலாவுசெம்பொ னிரண்டதாய்
வில்லினோசை யொன்றுடன் விளங்கவீத வல்லிரேல்
எல்லையொத்த சோதியானை யெட்டுமாற்றதாகுமே 72

மனத்தகத் தழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
மூலத்தடத் திருக்கிலும் பிறப்பறுத் திருப்பரே 73

முட்டுகண்ட தூமையின் முளைத்தெழுந்த சீவனை
கட்டிகொண்டுநின்றிடங் கடந்துநோக்க வல்லிரேல்
முட்டுமற்று கட்டுமற்று முனியினின்ற நாதனை
எட்டுதிக்குங் கையினா விருந்தவீட தாகுமே 74

ஐயிரண்டு திங்களா யடங்கிநின்ற தூமைதான்
கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டுமாகிய
மெய்திரண்டு சத்தமாம் விளங்கிரச கந்தமும்
துய்யகாய மானதுஞ் சொல்லுகின்ற தூமையே 75

அன்னைகர்ப்பத் தூமையி லவதரித்த சுக்கிலம்
முன்னையே தரித்ததுய பனித்துளிபோ லாகுமே
உன்னிதொக்குளழலுந் தூமையுள்ளே யடங்கிடும்
பின்னையே பிறப்பதுந் தூமைகாணும் பித்தரே 76

உயிரிருந்த தெவ்விட முடம்பெடுத்த தின்முனம்
உயிராதாவ தேதடா வுடம்பதாவதேதடா
உயிரையு முடம்பையு மொன்றுவிப்ப தேதடா
உயிரினாலுடம்பெடுத்த வுண்மைஞானி சொல்லடா 77

வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமுந் தரிக்கிறீர்
சிந்தையுள் நினைந்துமே தினஞ்செபிக்கு மந்திரம்
முந்தமந் திரத்திலோ மூலமந்தி ரத்திலோ
எந்தமந்திரத்திலோ வீசன்வந் தியங்குமே. 78

பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள தென்று நீர்
எண்ணமுற்றுயென்னபேருரைக்கிறீர்க ளேழைகாள்
பண்ணவும்படைக்கவும்படைத்து வைத்தளிக்கவும்
ஒண்ணுமாகி யுலகளித்த வொன்றைநெஞ்சி லுன்னுமே 79

நாலதான யோனியுள் நவின்றவிந்து மொன்றதாய்
ஆலதான வித்துளே யமர்ந்தொடுங்கு மாறுபோல்
சூலதான வுற்பனஞ் சொல்வதான மந்திரம்
மேலதான ஞானிகள் விரித்துரைக்க வேணுமே. 80

அருவமா யிருந்தபோ தன்னையங் கறிந்திலை
உருவமா யிருந்தபோ துன்னைநா னறிந்தனன்
குருவினால்தெளிந்துகொண்டு கோதிலாதஞானமாம்
பருவமான போதலோ பரப்பிரம மானதே 81

பிறப்பது மிறப்பதும் பிறந்திடா திருப்பதும்
மறப்பது நினைப்பது மறந்ததைத் தெளிந்ததுந்
துறப்பதுந் தொடுப்பதுஞ் சுகித்துவாரி யுண்பதும்
பிறப்பது மிறப்பதும் பிறந்தவீ டடங்குமே 82

ஆடுமாடு தேடினு மானைசேனை தேடினும்
கோடிவாசி தேடினுங் குறுக்கேவந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையு முகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தர்மம்வந்து நிற்குமே 83

ஊரிலுள்ள மனிதர்களா மொருமன தாய்க் கூடியே
தேரிலே வடத்தையின்றுசெம்பைவைத்திழுக்கிறீர்
ஆறினலு மறியொணத வாதிசித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் புரளிபாரும்பாருமே 84

சட்டையிட்டு மணிதுலங்குஞ் சாத்திரச்சுழக்கரே
பொஸ்தகத்தைமெத்தவைத்து போதமோதும் பொய்யரே
நிட்டையேது ஞானமேது நீரிருந்தவக்ஷரம்
பட்டையேது சொல்வீரே பாதகக் கபடரே 85

உண்மையான சுக்கில முபாயமா யிருந்ததும்
வெண்மையாகி நீரிலே விரைந்துநீர தானதும்
தண்மையானகாயமே தரித்துருவமானதும்
தெண்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே 36

பேய்கள்பேய்க ளென்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள்
பேய்கள்பூசை கொள்ளுமோ பிடாரிபூசை கொள்ளுமோ
ஆதிபூசை கொள்ளுமோ வனதிபூசைகொள்ளுமோ
காயமான பேயலோ கணக்கறிந்து கொண்டவே 86

பொருந்துநீரு மும்முளே புகுந்துநின்ற காரணம்
எருதிரண்டு கன்றையீன்ற வேகமொன்றை யோர்கிலீர்
அருகிருந்து சாவுகின்ற யானையு மறிந்திலீர்
குருவிருந்து லாவுகின்ற கோலமென்னகோலமே 87

சுக்கிலத் துளையிலே சுரோணிதக் கருவுளே
முச்சதுர வாசலில் முளைதெழுந்த மோட்டினில்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்குஞான தீபமா
யுச்சரிக்கு மந்திரம் ஓம்நமசி வாயமே 88

ஓசையுள்ள கல்லைநீ யுடைத்திரண்டாய் செய்துமே
வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீருஞ் சாத்துறீர்
ஈசனுக் குகந்தகல் லெந்தகல்லுசொல்லுமே 89

தொடக்கதொன்று நீர்விழித் தொடங்குகின்ற வூமர்காள்
தொடக்கிருந்த செவ்விடஞ் சுத்தியானதெவ்விடம்
தொடக்கிருந்த வாறறிந்து சுத்திபண்ண வல்லீரேல்
தொடக்கில்லாத சோதியைத் தொடந்துகாணலாகுமே 90

மேதியோடு மாவுமே விரும்பியே யுணர்ந்திடில்
சாதிபேத மாயுருக் தரிக்கும்வாறு போலவே
வேதமோது வானுடன் புலைச்சிசென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கிலாத வாறதென்ன பேசுமே 91

தீட்டந்தீட்டமென்றுநீர் தினமுழுகு மூடரே
தீட்டமாகி யல்லவே திரண்டுகாய மானதும்
தீட்டகாய மும்முளே புகழுகின்ற பேயரே
தீட்டவந்து கொண்டலோ தெளிந்ததே சிவாயமே 92

வாயிலெச்சில் போகவே நீர்குடித்து துப்புவீர்
வாயிருக்க எச்சில்போன வாறதென்ன தெவ்விடம்
வாயிலெச்சி லல்லவோ நீருரைத்த மந்திரம்
நாதனை யறிந்தபோது நாடுமெச்சி லேதுசொல் 93

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்துமொணமொணென்று சொல்லுமந்திரமேதடா
நட்டகல்லும்பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ 94

திருவள்ளுவர் ஞானம்.

யோனிக்குளாசை யொழியா தனித்திய முங்களுயிர்
தேனிக்குளின்பஞ்சகாதீதமோவருஞ் சிற்றின்பத்தில்
ஊனற்றுகாயமுடலற்றுப் பேரம்பொழுதொன்றறியா
ஞானர்க்குச்சொர்க்கஞ் சுடுகாடொழிய இனியில்லையே 95

ஞானமறிந்தோர்க்கு நமனில்லைநாள்தோறும்
பானமதையுண்டு பசியாறல்-ஞானமது
கண்டாலுடலுயிருங் காயம் வலுவாகும்
உண்டாலமிர்தாச முண் 96

காயசித்தியாலெனது கர்மவினைபோக்கியபின்
மாயசித்திமூலசுழி வாய்க்குமே-காயசித்தி
மூலப்புளியதனால் முதல்தீட்சையாச்சுதினி
காலமென்னரெண்டாண்டில் காண் 97

கல்லுப்பின்வாறு கருத்தறியா தண்டுமனு
வல்வினைக்குள்ளாகி மரணமானார்-கல்லுப்பு
வெள்ளைக்கல்லுப்பு வெகுவிதமாய்வந்தாலும்
உள்ளமதிலுண்டென்று உண் 98

உப்பின்கசடுதான் ஊறலதுமாறினதால்
மூப்புசுன்னமாவதற்கு முன்பேர் உப்பதனால்
கற்பாந்தகோடி காயமிதுவலுத்து
செற்பாயும்வாசியினால் தேகம் 99

பாம்பாட்டிசித்தர் பாடல்.

காடுநகர் வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுது நாடிவருமோ

கூடுபோனபின்பவற்றால் கொள்பயனென்னோ
கூத்தன்பதங்குறித்து நின்றாடாய்பாம்பே. 100

வண்ணப்பட்டும் வாசனையும் வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன் யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவாமாட்டாதென் றாடாய்பாம்பே. 101

மலக்குடமீதிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல் வண்ணத்தோலென்றும்
சலக்குழிக்குள்ளேநாற்றஞ் சார்ந்தசேறென்றும்
தானறிந்துதள்ளினோமென் றாடாய் பாம்பே 102

காலனெனுங்கொடிதான கடும்பகையைக்
கற்பனெனும் வாளினாற் கடிந்துவிட்டோம்
தாலப்பிறப்பினைத் தான் கடந்தோம்
தற்பரங்கண்டோமென் றாடாய்பாம்பே 103

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறைப்பார்
தன்னையறியாதவரே தன்னைக்காட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றாடாய் பாம்பே 104

சமயபேதம்பலவான சாதிபேதங்கள்
சமயத்தோர்க்கேயல்லாது சற்சாதுக்களுக்கோ
சிவமயத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தேர்ந் தாடுபாம்பே 105

பூசைசெய்த தால்சுத்த போதம்வருமோ
பூமிவலஞ்செய்ததனாற் புண்ணியமுண்டோ

ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்றுதுணிந் தாடாய் பாம்பே 106

மூலவேரறிந்துகொண்டால் மூன்றுலகமும்
முன்பாகவேகண்டுனித்திய முத்திசேரலாம்
சாலவேரறிந்ததாலே தான்பயனுண்டோ
சகத்தைப் பொய்யென்றுதெளிந் தாடாய்பாம்பே 107

சகத்திருதியென்றிடாது தானனுதியாற்
சமைந்ததென்றுரைப்பார்கள் சத்தையறியார்
மகத்துவனிலைகற்ப வன்மையல்லாது
மற்றும்வண்மையில்லையென் ருடாய்பாம்பே 108

கண்டவர்களொருக்காலம் விண்டிடார்கள்
விண்டவர்களொருக்காலுங் கண்டிடார்கள்
கொண்டகோலமுள்ளவர்கள் கோனிலைகாணுர்
கூத்தாடிக் கூத்தாடி யாடுபாம்பே 109

ஆறுகலைக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீடுபோகுமுன்னே யரண்கோலிக்கொள்
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாதுகொண் டாடுபாம்பே 110

மணக்கோலங்கண்டு மிகமனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்குகின்றாய்
பிணக்கோலங்கண்டுபின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் ருடாய்பாம்பே 111

ஓங்காரக்கப்பத்தி னுச்சிமேலே
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்

ஆங்காரக்கோபத்தை யறுத்துவிட்டே
ஆனந்தவெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
சாங்காலமில்லாமற் றூணுவுடனே
சட்டதிட்டமாகச்சேர்ந்து சாங்கமாகவே
தூங்காமற்றுங்கியே சுகமடைந்து
தொந்தோம்தொந்தோமென் றூடாய்ப்பாம்பே 112

அகஸ்தியர் ஞானம்.

தானென்றபெரியோர்க ளுலகத்துள்ளே
தாயானபூரணத்தை யறிந்தபின்பு
தேனென்றவமுதமதைப் பானஞ்செய்து
தெவிட்டாதம்வுனசிவ யோகஞ்செய்தார்
ஊனென்றவுடலைநம்பி யிருந்தபேர்க்கு
ஒருநான்குவேதமென்றும் நூலாறென்றும்
நானென்றும்நீயென்றும் பலஜாதியென்றும்
நாட்டினாருலகத்தோர் பிழைக்கத்தானே 113

கைலாசம்வைகுந்தந் தெய்வலோகம்
காசிகன்னியாகுமரியென்னுஞ் சேதுவென்றும்
பயிலாடுமேகமென்றும் நாகமென்றும்
மாய்கையென்றும் மின்னலென்று மவுனமென்றுந்
துயிலான வாடையென்றுஞ் சூக்ஷமென்றும்
சொல்லற்றவிடமென்று மொடுக்கமென்றும்
அயிலானபாதமென்று மடிமுடியென்றும்
தாயானவஸ்துவென்றும் பதியின்பே 114

வாலைக்கும்மி.

ஆணும்பெண்ணுங்கூடி யானதினாற்பிள்ளை
ஆச்சுதென்றேநீரும் பேசுகின்றீர்

பெண்ணுமாணுங்கூடி யானதல்லோபேத
மற்றொருவித்தாச்சு வாலைப்பெண்ணே. 115

பெண்டாட்டியாவதும் பொய்யல்லவோபெற்ற
பிள்ளைகளாவதும் பொய்யல்லவோ
கொண்டாட்டமான தகப்பன்பொய்யேமுலை
கொடுத்ததாயும் நிசமாமோ. 116

தாயும்பெண்டாட்டியுந் தான்சரியே தன்யம்
தாமேயிருவருந் தாங்கொடுத்தார்
காயும்பழமுஞ் சரியாமோ வுந்தன்
கருத்தைப்பார்த்துக்கொள் வாலைப்பெண்ணே 117

பெண்டாட்டி மக்கை மட்டுவருவாள்பெற்ற
பிள்ளை மசானக் கரையுமட்டும்
தொண்டாற்றுத் தர்மம் நடுவிலேவந்து
சேர்ந்துபரகதி தான்கொடுக்கும் 118

பாக்கியமும்மகள் யோக்கியமும்ராச
யோக்கியமும்வந்த தானாக்கால்
சீக்கிரந்தருமஞ் செய்யவேண்டுங்கொஞ்சந்
திருப்பணிகள் முடிக்கவேண்டும். 119

திருப்பணிகள் முடித்தோருஞ்செத்துச்
சாகாதபேரி லொருவரென்றும்
அருட்பொலிந்திடும் வேதத்திலேயவ்வை
அறிந்துசொன்னாளே வாலைப்பெண்ணே 120

மெத்தைதனிலே படுத்திருந்து நாமும்
மெல்லியருடன் சிறக்கும்போது

யுத்தகாலன்வந்து தாம்பிடித்தால் நாமும்
செத்தசவமடி வாலைப்பெண்ணே 121

ஏழையனாதிக ளில்லையென்றாலவர்க்
கிருந்தாலன்னங் கொடுக்கவேண்டும்
நாளையென்றுசொல்ல லாகாதேயென்று
நான்மறைவேத முழங்குதடி. 122

பஞ்சைப்பனாதியை யடிக்காதேயந்தப்
பாவந்தொலைய முடியாதே
தஞ்சமென்றோரை கெடுக்காதேயார்க்கும்
வஞ்சனைசெய்ய நினையாதே 123

கண்டதுங்கேட்டதுஞ் சொல்லாதேகண்ணில்
காணாதவுத்தரம் விள்ளாதே
பெண்டாட்டிக்குற்றது சொல்லாதேபெற்ற
பிள்ளைக்கிளப்பங்கள் கொடுக்காதே 124

வழக்கழிவுகள் சொல்லாதேகற்பு
மங்கையர்மேல்மனம் வையாதே
பழக்கவாசியைப் பார்த்துக்கொண்டுவாலை
பாதத்தைப்போற்றடி வாலைப்பெண்ணே 125

சாதிபேதஞ் சொல்லுகிறீர்தெய்வம்
தானென்றொருவுடல் பேதமுண்டோ
ஓதியபாலதி லொன்றாகியதில்
உற்பத்திசெய்தயிர் மோராச்சு 126

பாலோடுமுண்டு பூனையுமுண்டு
மேலாகக்காணவுங் காண்பதில்லை

மேலந்தவாசையைத் தள்ளிவிட்டுமனதில்
வேண்டிப்பூசையைச் செய்திடுங்கள் 127

கோழிக்காறுகா லென்றுசொன்னேன்கிழக்
கூனிக்குமூன்றுகா லென்றுசொன்னேன்
கூளிக்கிரண்டெழுத்தென்று சொன்னேன் முழுப்
பானைக்குவாயில்லை யென்றுசொன்னேன் 128

ஆட்டுக்கிரண்டுகா லென்றுசொன்னேனம்
மானைக்குப்பானைக்கு நிற்குமேல்சூல்
மாட்டுக்குகாலில்லை யென்றுசொன்னேன்கதை
வகைவைச்சொல்லடி வாலைப்பெண்ணே 129

கோயிலுமாடும் பறித்தவனுங்களறி
கூற்றுமேகற் றிருந்தவனும்
வாயில்லாக்குதிரை கண்டவனுமாட்டு
வகைதெரியுமோ வாலைப்பெண்ணே 130

உற்றதுசொன்னு லற்றதுபொருந்தும்
உண்டோஉலகத்தி லவ்வை சொன்னுள்
அற்றதுபொருந்து முற்றதுசொன்னுள்
அவனேகுருவடி வாலைப்பெண்ணே 131

நிஜானந்தபோதம்

விண்ணைப்பார் தன்னைப்பார் மண்ணைப்பாரு
மேன்மைபெறு குருவருளை மேவிப்பாரு,
பெண்ணைப்பார்த்தலையாதே பெண்தான்தேகம்
பிரியமுடன் தேகமதைப்பேணிப்பார்த்தால்,
கண்ணப்பா துலங்குமடா அந்தக்கண்ணல்
காணலாஞ் சித்துவெகு கண்ணில் காணும்,

மண்ணப்பா வென்றசடந் தன்னைப்பேணு
மார்தருக்கு வென்னவரும் மண்தானுமே 132

செய்தத்மிழ்தனையறிந்து பதினெண்பேரை
செம்மையுடன் காண்பதற்கு மூலங்கேளு,
சைதன்னியமானதொரு தன்னைப்போற்றி
சதாகாலம் ஓம்ஸிங்ரங் அங்ஸிங்கென்று,
மெய்தவரு பூரணமா யுருவேசெய்தால்
வேதாந்தசித்தரைத்தான் வசமாய் காண்பாய்
உய்தமுடனவர்களைத்தான் வசமாய் கண்டால்
வுத்தமனே சகலசித்துக் குதவியாமே 133

நெஞ்சறி விளக்கம்.

தந்தைதாய்நிஜமுமல்ல ஜனங்களுநிசமுமல்ல
மைந்தருநிஜமுமல்ல மனைவியுநிஜமுமல்ல
இந்தமெய்நிஜமுமல்ல வில்லறநிஜமுமல்ல
சுந்தரநாகைநாதர் துணையடிநிஜம்பார்நெஞ்சே 134

காண்பது மழிந்துபோகும் காயமு மழிந்துபோகும்,
ஊண்பொரு ளழிந்துபோகும் வுலகமுமழிந்துபோகும்,
பூண்பணி நாகைநாதர் பொற்பத மழியாதென்று,
வீண்பொழுதினைப் போக்காமல் வெளிதனிலொளிபார்
நெஞ்சே. 135

நாடென்று நகரமென்று நலந்திகழ் வாழ்வதென்றும்,
வீடென்று மனையாளென்று மிக்கதோர் மைந்தரென்றும்,
மாடென்றுஞ் சம்பத்தென்றும் வாஞ்சைகொண்டலைந்தா
யிந்தக், கூடொன்று மழிந்தாற்கூடத் தொடருமோ
கூடுநெஞ்சே 136

நித்திரைவந்தபோது நினைவுதானிருந்ததெங்கே
புத்திரர்தாமுமெங்கே புணர்ந்திடுமனைவியெங்கே
பத்திரபூசையெங்கே பலதொழில்செய்வதெங்கே
சிற்பரனுகைகாதர் செயலினையறிவாய் நெஞ்சே 137

பளிங்குற்றகுளத்துநீரைப் பாசிதான்மறைத்தாற்போலக்
களங்கற்றபுத்திதன்னைக் காமன்தான்மூடிக்கொண்டு
விளங்கத்தான் செய்வதில்லை மெய்யறி விளக்கையேற்றி
முழங்கத்தானுகைகாதர்முழுமொழி பகர்வாய்நெஞ்சே 138

ஓமென்னும் பிரணவத்து ளுதித்தவைந்தெழுத்துமாகி
ஆமெனுமகாரபீடத் தமர்ந்திடு வாசிகண்டு
ஊமெனுமௌனமுற்றே யூரிடுமதிப்பாலுண்டு
தாமெனுனுகைகாதர் தாண்டவம் பார்ப்பாய் நெஞ்சே 139

பொறிவழியலைந்துமீளும் புலன்களையடக்கிஞான
அறிவெனும் விழியினாலே யம்பரவெளியைப் பார்த்து
உரிதனிலிருக்குங்கள்ளை யுண்டுதற்போகமிட்டு
நெறிதருனுகைகாதர்நிலைமைகண்டறிவாய்நெஞ்சே 140

ஆயாத நூல்களெல்லா மாய்ந்துநீபார்த்துங் காமத்
தீயான குழியில்வீழ்ந்து செனனமுற் றலைந்தாயுன்னின்
காயாதபாலையுண்டு கனகவம்பலத்தைக்கண்டு
மாயாமனுகைகாதர் மலரடி வணங்குநெஞ்சே 141

சாயனை யறிந்திடாமனுமினன்னு மாண்மையாலே
ஆயனில்லாதகாலி யாகிநீ யலையலுற்றாய்
காயமே கோயிலாகக் கலந்திருந் தவனைக்கண்டு
மாயொனு வாழ்க்கைனுகை காதரைவணங்கு நெஞ்சே 142

உடுப்படுங் கல்லுஞ்செம்பும் உண்மையாய்த்தெய்வமென்றே
மருப்புனை மலரைச்சூட்டி மணியாட்டித் தூபங்காட்டி
விருப்பமுற்றலைந்தாயந்த வினைமயல் விட்டுநின்னுள்
இருப்பவ னங்கநாத ரிணையடிபூசிநெஞ்சே 143

ஊனைவிடவேறேதெய்வ முண்டென வுலகிற்றேடும்
நினைவதே தெய்வமாகி நீ கண்டு நின்றுபானல்
செனனமாய்பிறவிபோகுஞ்சிவத்துளேசேர்க்குமெங்கோன்
மனமகிழ் வாசினகை னதர்தாள் வணங்கு நெஞ்சே 144

ஆசையாம்பாசமாயை யறிவதை மயங்கியுன்னுள்
ஈசனைத்தேடொட்டாம விருக்குமவ் விருளைப்போக்கிக்
கோசமா குறியைநோக்கிக் குருபரன் வடிவைக்கண்டு
வாசமாமலரானுர் னைகநாதரை வணங்கு நெஞ்சே 145

கடமதினிறைந்துநின்ற கனலொளிபோலேவுன்றன்
செடமதி னிறைந்துநின்ற சீவனை யறிவார்கண்டு
திடமிகுசீவசாட்சி தரிசிக்கசீவன்முத்தி
இடமரு னைகநாத ரிணையடியுணர்வாய்நெஞ்சே 146

உப்பொடு புளிப்புங்கைப்பு மூணர்வினு லறிந்துநீதான்
எப்போது முனக்குனுய னிருப்பிடமறியாதென்னே
முப்போதுங் குருவைப்போற்றி முனைசுழிவாசிபார்த்தால்
அப்போது நாகைநாத ரடியிணையறிவாய் நெஞ்சே 147

ஆண்டொருநூறுகற்ப மௌஷதமுமிரண்டு
நீண்டதோர்காயசித்தி நெடுநாளைக்கிருந்தபேருப்
மாண்டுதான்போவாரல்லான் வையகத்திருப்பாருண்டோ
நீண்டொணனைகநாதர் சீர்பதந் தேடுநெஞ்சே 148

நாடகப்பெண்ணையாட்டு நட்டுவன்போலேயுன்றன்
கூடகச்சடத்தையாட்டுங் குருவைநீயறிந்திடாமன்
மூடகமானாய்ஞான முதல்வனையறிவாற்றேடி
ஆடகநாகைநாத ரடியிணைப்பணிவாய்நெஞ்சே 149

கருவூரார் பூஜாவிதி.

புகலுவார்வேதமெல்லாம் வந்ததென்று
பேய்பேசிசாஸ்திரங்கள் மிகவுங்கற்று
அகலுவார் பெண்ணாசை விட்டோமென்று
அறிவுகெட்டுஊர்தோறுஞ் சுற்றிச்சுற்றி
சகலமுமேவந்தவர்போல் வேடம்பூண்டு
சடைமுடியுங்காஷாயந் தன்னைச்சாற்றி
இகலுமனமடங்காமல் நினைவுவேறாய்
எண்ணமெல்லாம்பெண்ணாசை பூசைதானே 150

பூசையதுசெய்வமென்று கூட்டங்கூடி
புத்திகெட்டெக்கைம்முறையின்போக்கைவிட்டு
பாசையதுமிகப்பேசிப் பாட்டும்பாடிப்
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக் காணார்
ஆசைபெண்ணாசை மயக்கத்தாலே
யங்கிருந்தவாமத்தைப் பங்குபோட்டுப்
பேசையிலேமனம்வேறாய் நினைப்பான்பாவி
புரட்டுருட்டாய்நினைவு தப்பிப்பேசுவானே 151

பேச்சென்றால்வாய்சமர்த்தாய்ப் பேசிப்பேசி
பின்னுமுன்னும்பாராமல் மதமேமீறி
நீச்சென்றும்நிலைப்பென்று மேதுங்காணார்
நிர்மூடரனேகவித ஜாலங்கற்று

ஆச்சென்றாதனலே வருவதேது
ஆத்தாளைப்பூசித்தோ னவனேசித்தன்
மூச்சென்னசெய்யு மடா நரகிற்றள்ளும்
மோசமது போகாதே முக்கால்பாரே 152

ஞானரத்தினக் குறவஞ்சி.

எந்தவழியினல் வந்தோமூலகினில்சிங்கி அது
வெல்லாமுடிந்த பொருள்வழியடாசிங்கா 153

தன்னுள்விளங்குந்தவமென்னசொல்லடி சிங்கி நீ
தன்னைமறந்துதவத்திலிருப்பது சிங்கா 154

என்னவிதமாகத்தன்னைமறப்பதுசிங்கி நீ
யொன்றைப்பொருந்தியொடுங்கியிருப்பதுசிங்கா 155

என்னவிதமாக வொன்றைப் பொருந்தலாம்சிங்கி அது
வல்லாமறந்துயிருாயிருளப்பதுசிங்கா 156

இரவும்பகலு மொன்ருனதுமெவ்விடம்சிங்கி அது
வெப்போது மிருளாயிருப்பதுமூலேயே சிங்கா 157

இடகலேபின்கலே என்னத்தைச்சொல்லலாம்சிங்கி அது
இடகலேசந்திரன்பின்கலேசூரியன்சிங்கா 158

மாற்றிப்பிடிக்க மருந்தென்ன சொல்லடி சிங்கி அது
மாளாமல் பாண்டு மறந்துஇருப்பதேசிங்கா 159

ஞானக்கும்மி

குருவிருப்பதுமுள்ளத்திலே மனக்
கோணலறுப்பதுந் தன்னுக்குள்ளே 160

பொருளிருப்பதறியாமற் புடம்
போடுவதெப்படி ஞானப்பெண்ணே 161

வாதஞ்செய்யவறியாமல் ரச
வாதஞ்செய்கிறோமென்றுசொல்லிச்
சூதங்கெந்திபுடத்திலிட்டா லதிற்
சொர்னம்விளையுமோ ஞானப்பெண்ணே 162

லிங்கமுருக்கவல்லவர்கள் சாதி
லிங்கமிருப்பதறியாமல்
வங்கமுந்தங்கமுஞ் சேர்ந்துருக்கினால்
பங்கமிதல்லவோ ஞானப்பெண்ணே 163

பாஷாணங்குகை தன்னில்வைத்துப்
பாலாலூட்டிக் குகைமூடி
யீசானியப்புடமிட்டாலு மதி
லிருப்பதென்னடி ஞானப்பெண்ணே 164

காரணகாரியமா மதைக்
கட்டவறியார்முழுமூடர்
பூரணமென்றுதிரிந்தாலு மதிற்
புண்ணியமுண்டாமோ ஞானப்பெண்ணே 165

முப்பூவென்று திரிவார்கள் அந்த
முப்பூவந்தவகை காணார்
அப்பூவென்றுமறிந்தாக்காற் சித்தி
யாமென்றுகும்மி யடியுங்கடி. 166

காரத்தைக் கட்ட வறியார்கள் கடுஞ்
சாரத்தைநீற்றினஞ் செய்யாமல்

வீரத்தைப்பூரத்தைச் சேர்த்ததினாலது
வீணல்லவோசொல்லு ஞானப்பெண்ணே 167

கோரவித்தையை யறியாமல் லோக
வேஷத்தினின்று மலேவார்கள்
கோசபீசமறிந்தாலே வாதங்
கேசரமாமடி ஞானப்பெண்ணே 168

வாதத்திறவுகோல் காணாரே பஞ்ச
பூதச்சரக்கையுந் தோணாரே
யேதுக்குகண்புதைந் தூதுகின்றாரிதை
யேதென்றுகேளடி ஞானப்பெண்ணே 169

துருசுசுன்ன முடித்தாச்சு அதைச்
சோதிக்கவெட்டரை மாற்றாச்சு
பொருளைச்சொல்லிப் பணம்பறிப்பாரிவா
பொய்க்குருவல்லவோ ஞானப்பெண்ணே 170

கவணசூத முடிந்ததென்பார் ஊசிக்
காந்தத்தைக்கிண்ணமுஞ் செய்தோமென்பார்
புவனவாதப் புரட்டாலேயவர்
பிழைக்கிறாரடி ஞானப்பெண்ணே 171

பிழைக்கமுத்தி யறியாமலே சென்ம
பூர்வக்கியானமுந் தெரியாமற்
றழையைத்தின்று சருகாகித்
தயங்குறாரடி ஞானப்பெண்ணே 172

தயங்கியென்ன பலனாமோ மனஞ்
சாதித்துநிற்கத் திறமாமோ

மயங்கிடாதே வழலைமகத்துவம்
வருவதெப்படி ஞானப்பெண்ணே 173

உப்பையறிந்தவ னேவாதி சகத்
துப்பையொழித்தவ னேயோகி
தப்பிலையேபூமி நாதமகிமையைச்
சார்ந்துபாரடி ஞானப்பெண்ணே 174

வீட்டிவிருக்கு தொருமூலம் வெளிக்
காட்டிவிருக்கு திருமூலம்
மாட்டிவிருக்கும் பெரியோர்க்குரச
வாதமிதல்லவோ ஞானப்பெண்ணே 175

தோணுதென்ற சரக்கெடுத்துக் கருஞ்
சூராசூரையில் வைத்தெடுப்பச்
சாணன்கண்ட பொருள்போலேசித்தி
தானென்றுகும்மி யடியுங்கடி 176

செல்லிருக்குதுகாட்டுக்குள்ளே கரு
செல்லியிருக்குது வீட்டுக்குள்ளே
கொள்ளிமலைக்குத் திரிந்தாலும் குரு
கொண்டுவருவாரோ ஞானப்பெண்ணே 177

காயரம்பட்டிக் குளத்துக்குள்ளே வெள்ளை
சாயரம்வேரு முளைத்திருக்கும்
வாயாற்றின்று நிமிர்ந்தாக்காலுடல்
மாயாதல்லவோ ஞானப்பெண்ணே 178

கற்பநிலையறிந் தெண்ணுமல் வெறிக்
கஞ்சாவுண்டு விழிப்பார்கள்
அற்பர்குகைமலை சென்றாலும் வஸ்து
வறியலாகுமோ ஞானப்பெண்ணே 179

கொங்கணர்சொன்ன கடைக்காண்டம் அதிற்
சங்கையறிவது பிரம்மாண்டம்
எங்கள்குரு சட்டமுனியா
ரிருநூறும்பாரடி ஞானப்பெண்ணே 180

நூறிலுரைத்தது மெஞ்ஞானந் திரு
மூலருணர்ந்தது வேஞானம்
பூரணகும்ப முனிசொன்னசூத்திரம்
பூண்டகம்பாரடி ஞானப்பெண்ணே 181

தீட்சையின்மச்ச முனிதீட்சை யவர்
செப்பினஞான மொருநூறும்
தாழ்ச்சிவராது பெரியோரைக்கண்டு
காட்சிகேளடி ஞானப்பெண்ணே 182

ரேசகபூரக கும்பகத்தால் வாசி
நேரிட்டுசெய்யுது மாசையடி
கேசரமாகிய வத்விதபிர்மத்தைக்
கிட் டிக்கும்மியடியுங்கடி

தேசங்கள்போவது மாசைய்டி குல
தெய்வமுண்டென்பது மாசையடி
கேசமெம்பிர்ம ஞானசோதியை
சேர்ந்துகும்மியடியுங்கடி 184

சமயபேதமு மாசையடி கங்கா
ஸ்நானபூசையு மாசையடி
மமதையற்றிருக் கின்றமமதையை
வாழ்த்திகும்மி யடியுங்கடி 185

நந்தீசர் ஞானச்சிந்து.

பஞ்சக்கருவிகளும் பாழாகுமென்றுநீயுங்
கொஞ்சமுநினையாமலே — நெஞ்சமே
கொண்டாளனடிக்கிறாயே

ஆத்துமாவானவைம்பூதவில்லவனை
கூற்றுவனுஞ்சீற்றங்கொண்டால் — நெஞ்சமே
கொண்டாட்டமெங்கிருக்கும்

எத்தனையாக வளர்த்தாலுமிக்கூட்டில்
எத்தாலிருப்பதுண்டோ — நெஞ்சமே
எமனழைத்துவிட்டால்

எலும்புநரம்பு மிசைகுருதித்தோலும்
மலமுங்குவிந்திருக்கும் — நெஞ்சமே
மாயையாம்பாண்டமிது

நீரிற்குமிழியாம் நிலையில்லாயாக்கைபர
நாரிவலையிலாழ்ந்து — நெஞ்சமே
நாசமடைகிறதே

இதனையறியாம லிடருக்கேயாளாகி
மதனைமயக்குமங்கை — நெஞ்சமே
மார்க்கத்துழல்கிறாய்

ஊத்தைச்சரீரத்துக் குபசாரஞ்செய்தவனுங்
காற்றோடுகூடிவிட்டால் — நெஞ்சமே
காணக்கிடையானவன்

எந்தவிதத்தாலு மிடருக்கேயெக்கூடுஞ்
சொந்தமல்லவுனக்கு — நெஞ்சமே
சூட்சுமத்தை சொல்லினேனே

மனமென்னுமாங்கார மாட்டைப்பிடித்துநல்ல
குணமென்னுங்கூர்படையால் நெஞ்சமே
குத்தித்திருப்பிடுவாய்

காதென்றுங்கண்ணென்றுங் கைகால்வாய்மூக்கென்றுஞ்
சூதுக்குச்செய்ததல்லோ நெஞ்சமே
ஸ்தூலமாந்தேகமிதை

ஆஸ்தியடைந்தவர்பா லனைவருங்காத்திருப்பார்
நாஸ்தியானவனிடம் நெஞ்சமே
நாடாரொருவருமே

நாய்நரிகள்தின்று நாறுமுடம்பை
பேய்கழுகுகண்டுவிட்டால் நெஞ்சமே
பெரியவிருந்தென்னுமே

காயமபாயங் காலனுக்குநேயம்
மாயமாய்ப்போகுமுன்னே நெஞ்சமே
மார்க்கத்தை கண்டிலேயே

எத்தனைநாளைக்கிருந்தாலுமிக்கூடு
பற்றியெரியுமென்றே நெஞ்சமே
பாரில்நினைப்பதில்லை

ஒன்பதுவாயி லுலாவிநிற்குமுயிரைத்
துன்பியக்குந்தூதழைத்தால் நெஞ்சமே
துணைவிட்டிருந்திடுவாய்

பஞ்சநிறக்கிளி பறந்துபதுங்குங்கூட்டை
வஞ்சநமன் கண்டுவிட்டால் நெஞ்சமே
வந்துபிடித்திடுவான்

ஆவியடங்கியபின் ஞானபந்துஜெனங்கள்
கூவியழுதுடலை நெஞ்சமே
கொண்டே கொளுத்திடுவார்

உயிரைப்பிடித்துப்போக உற்றவாரண்டும்பாசக்
கயறுமெடுத்துவந்த நெஞ்சமே
காலன்விடுவதுண்டோ

லஞ்சங்கொடுத்து லகுவாகச்சொன்னாலுங்
கொஞ்சமுமிரங்கானவன் நெஞ்சமே
கோலங்கொண்டகாலனவன்

நோய்வந்துகொல்லும் நொடியினிற்செல்லும்
வாய்வுமடங்கிவிட்டால் நெஞ்சமே
வாராதொருபிணியும்

எப்போதுஞ் சொந்த மேற்றசுடுகாடு
தப்பாமற்சேர்வோமென்று நெஞ்சமே
தானுயறிந்திலையே

யோகஞ்செய்யவென்று லொவ்வலைபோதேகம்
போகத்துக்கென்றுசொன்னால் நெஞ்சமே
பேய்போற்றிரிகிறாயே

நிஷ்டையிலிருந்து நின்னைமறந்து
அஷ்டாங்கயோகஞ்செய்து நெஞ்சமே
ஆராய்ந்தனுசரிப்பாய்

அஷ்டாங்கயோகமுடித் தாராய்ந்தனுசரித்தால்
இஷ்டமுடன்வருவார் நெஞ்சமே
ஈசனுநேசனாக

இஷ்டமுடன்வந்தா லீசனும்நேசனாக
கஷ்டமேதுவுனக்கு நெஞ்சமே
காண்பதெளிதலவோ

காண்பதெளிதலவோ கருணைக்கடலாமது
ஆணவமத்தனையும் நெஞ்சமே
ஆட்டியடக்கிடுமே

ஆட்டியடக்கிவிட்டா லழிவில்லையென்னாளும்
நாட்டிலிருந்தாலுமே நெஞ்சமே
நாடானமனுன்னையே

நாடானமனென்று நாரிக்காசைவைத்தாற்
றேடியேவந்திடுவான் நெஞ்சமே
தேட்டமுடனவனும்

தேட்டமுடன்வந்துவிட்டாற் றீராநரகில்நாளும்
போட்டுப்பொசுக்கியுன்னை நெஞ்சமே
புழுக்கிரையாக்கிடுவான்

புழுக்கிரையாவோமென்று புத்தியில்நினைத்துமன
வழுக்கையறுத்துவிட்டால் நெஞ்சமே
அருள்வானரனடியை

மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்கவேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை வுயர்த்தவேண்டாம்
மனமது செம்மையானால் வாசிவை நிறுத்தவேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே

நெடும்பசியும் = எல்லாவற்றிலும் பெரிதாகிய பசியும்

அற்ருல் = ஒழிந்தால்

அது = அதனுலேற்பட்ட பலனுல்

அனைத்துலகும் = எல்லா உலகங்களுக்கும்

வீடாம் = உறைவிடமாக சரீரமாகும்

(கருத்துரை) தேகத்தின் கண்ணுண்டாகும் சங்கல்பமும், யாவற்றையும் அறியவொட்டாது மறைக்கும் மறதி நிரயங்களும் பசியும், ஒழிந்தவிடத்து, எல்லா உலகுக்கும் தேகமானது உறைவிடமாகும்.

220
4-69

விசேஷவுரை.

உலக பாகம்	ஞானபாகம்
நினைப்பு:—	
சங்கற்ப பலத்தினுற்ருன் எண்ணிய கருமத்தை முடிக்கலாம்.	சங்கற்ப நாசத்தால் மனம் வலிவடையும். பிறகு பலப்படும். ஞான கர்மத்துக்கு உதவி செய்யும்.
மறப்பு:—	
மனம், வாக்கு, காயங்களாலுண்டாகும், உழைப்புக்கு ஆறுதல் செய்வதில் பேர் பெற்றது.	மறப்பற்ருல் தான் 14 உலகங்களையும் தன்னையு மறியலாம்.
பசி:—	
பசியானது உணவுகளை உட்கொள்ளுவதற்கு சமிக்கையாக விருப்பதோடு உண்ட ...ணவை ஜீரணித்து, அதை ...தவஞ்செய்து, சக்கிலம், ...ம், மலமாகப் பிரிக்கும். ...ர்மை நேரிட்டால் மேற் ...வைகளுக்கு எதிரி ...ண்டாக்கும்.	பசி யொழிந்தால் ... தன்மை உண்டாகி, ... ஆத்ம பலம், தேகபலம் உண்டாகின்றது. பஞ்சேந்திரியங்களை அகமுக விவகாரத்தில் செலுத்தும் சூட்சும தத்துவங்களுக்கும், தூல தத்துவங்களுக்கும் பலத்தைக் கொடுக்க, அமிர்த ஊற்று சுரக்கும்.

அகஸ்தியர் ஞானம் ஒன்று

உண்ணும்போ துயிரெழுத்தை புயர வாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவேயாகும்
பெண்ணின்பா விந்திரியம் விடும்போதெல்லாம்
பேணியே வலம்நோக்கி நிலைத்தாயாகில்
தின்னுங்கா யிலைபழங்க ளருந்தும்போதும்
தினந்தோறு மிப்படியே செலுத்தவல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார்பாரு
மறலிகையி லகப்படவு மாட்டார் தானே

ஔவைக் குறள்.

உறக்க முணர்வு பசிகெடப்பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.

(பதவுரை)

பிறப்பு = ஜெனித்தவ னிடமுள்ள
உறக்கம் = நித்திரை
உணர்வு = உணர்ச்சி
பசி = பசி
கெடப்பட்டால் = இவை மூன்றையும் ஒழித்தால்
பிறக்கவும் வேண்டா = மறுபடியும் ஜெனிக்க வேண்டாம்
(சாகாமலிருக்கலாம்)

(கருத்துரை) பிறப்பினுண்டாகிய நித்திரை, மனனம், பசி இவைகளொழிந்தால் சாகவேண்டியதில்லை.

நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றால்
அனைத்துலகும் வீடாமது.

(பதவுரை)

நினைப்பும் = சங்கல்பமும்
மறப்பும் = யாவற்றையும் மறைத்துக்கொண்டி
ருக்கும் நித்திரைகளும்